**மாத்தளை மாநகர சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் ரூபா 1,730,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்த 02 வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் போது ரூபா 1,300,000 ரூபா 430,000 எனக் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டு சீராக்கி சரியாக கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | புகையிரக களஞ்சியத்தை பயன்படுத்தியமைக்காக ரூபா 421,935 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் கொடுத்தோராக இனங் காணப்பட்டு கொடுப்பனவிற்காக எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | - மேற்படி - |
| (இ) | முன்னைய ஆண்டுக்குரியதாக மீளாய்வாண்டின் போது 08 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 567,308 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் கட்டிடங்களில் பூச்சு பூசுவதற்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 433,393 காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனம் ஆக்கப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் 05 திட்டங்களின் நிர்மாணம் மற்றும் திருத்தங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தம் 5,012,184 மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 02 சொத்து விடயங்களுக்குரிய மீதிகள் உப அட்டவணைகளின் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 307,509 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | எதிர்காலத்தில் பரீட்சித்து இணக்கமின்மையை சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சரியாக்கப்பட வேண்டும் |

**1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு உள்ள வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 545,237 ஆன இருப்பு மிகை திட்டவட்டமாக இனங் காணப்படாமல் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இம்மீதி தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்து எதிர்வரும் காலங்களில் சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவன (நிறைவேற்றப்பட்ட) சட்டத்தின் விளம்பரம் தொடர்பான உபவிதி சட்டம் | 50 நிறுவனங்களின் 102 பெயர் பலகைகளுக்காக அறிவித்தல் பதாகை கட்டணங்களாக ரூபா 615,780 அறவிடப்பட்டிருக்க வில்லை. | செலுத்தாத நிறுவனங்களுக்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) மாநகர கட்டளை சட்டம் (252 ஆம் அதிகாரம்)** | | | |
| 247(அ) பிரிவு | தெரிவு பரிசோதனையின் போது இனங் காணப்பட்ட அதிகார பிரதேசத்தின் 13 வியாபாரங்களுக்காக ரூபா 52,000 ஆன வியாபார அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டுக்குரிய அனுமதிபத்திர கட்டணங்கள் நானாவித வருமானங்களின் கீழ் அறவீடுவதற்கு நடவடிக்கை | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(இ) ஏனைய சுற்றறிக்கை** | | | |
| 2021 திசெம்பர் 29 ஆம் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட 135 லீட்டர் டீசல் எரிபொருளுக்குரிய படிகள் சம்பளத்துடன் சேர்த்து இருக்கையில் அந்த அளவை மிகைத்து 2021 ஜூன் முதல் 2023 ஒக்டோபர் வரையான | மாநகர சபைகள் கட்டளை சட்டத்தின் பிரகாரம் இந்த எரிபொருள் பெற்றுக் கொண்டதாக | சுற்றறிக்கையனின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

காலப் பகுதியில் அங்கீகாரம் இன்றி மாநகர ஆணையாளரின் பிரயாணங்களிற்காக 4,120 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 1,042,721 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 111,343,407 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 79,574,869 இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 40,443,000 | 46,133,318 | 50,028,929 | 40,443,000 | 38,200,000 | 43,631,653 | 46,554,974 | 44,128,415 |
| (ii) | வாடகை | 18,987,000 | 20,246,271 | 22,340,654 | 18,987,000 | 27,062,000 | 27,299,964 | 26,488,416 | 15,517,135 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 11,000,000 | 9,510,128 | 9,735,769 | 11,000,000 | 15,401,000 | 12,573,547 | 11,793,096 | 980,641 |
| (iv) | ஏனைய வருமானம் | 42,857,349 | 28,808,785 | 20,278,375 | 42,857,349 | 95,030,000 | 100,412,155 | 111,314,93 | 41,740,752 |
| | மொத்தம் | 113,287,349 | 104,698,502 | 102,383,727 | 113,287,349 | 175,693,000 | 183,917,319 | 196,151,417 | 102,366,943 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 40,232,804 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டதுடன் ஒவ்வொரு அலகிலிருந்தும் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 38 ஆதனங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,795,541 ஆன நிலுவை மீதியொன்று மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 வது அதிகாரம்) 251 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் 17 அரச நிறுவனங்கங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி மீதி ரூபா | ஆதன உரிமையாளர் களுக்கு சிவப்பு அறிவித்தல் மூலம் பிடியாணை வழங்கப் பட்டுள்ளதுடன் ஆதனங்களைத் தடை செய்து அடுத்து சட்ட நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3,632,354 ஆக இருந்ததுடன் 21 தனியார் ஆதனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி மீதி 11,163,187 ஆக இருந்தது. | | |

**(ஆ) நீர்க் கட்டணம்**

| | | |
|---|---|---|
| 19 ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா 4,802,812 ஆன நிலுவை நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கடிதங்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி இருந்த போதும் இதுவரை தீர்வொன்று கிடைக்கவில்லை என்பதாக | நிலுவை நீர் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) நிலுவை ஒரேதடவை தொகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,909,189 ஆன கடை வாடகை அளவில் ஒரே தடவையில் அறவிடப் வேண்டிய தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இந்நிலையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுகளை வெளியேற்றுதல் சுற்றாடலுக்கு குறைந்த சேதத்தில் உள்ள வகையில் மேற்கொள்ளப்படும் இயலுமை காணப்படுவது தொடர்பாக முன் சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொள்ளாமலும் சுற்றாடல் அனுமதி | தற்போது சுற்றாடல் சேதமொன்று இடம் பெறுவதில்லை என்பதால் இவ்வழக்கு முடிவடைந்துள்ளது இவ்வழக்கின் தீர்ப்பு | திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னால் குறித்த நிறுவனங்களில் தேவைப்பாடு பரிந்துரைகள் |

| | | |
|---|---|---|
| பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமல் மாநகர சபையால் வாரியபொல வத்த காணிக்கு கழிவு பொருட்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பாக அருகில் குடியிருப்பாளர் ஒருவரால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த காரணத்தினால் 2008 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வழக்கறிஞர் கட்டணங்களாக மொத்தம் ரூபா 6,176,475 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்த நேர்ந்தது. | இதுவரை கிடைக்கவில்லை என்பதுடன் அது கிடைத்த பின்னர் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

### 3.2 வெளிப்படியான மோசடிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதி 2256 ஆம் இலக்க வர்த்தமானி நீர் வெளியிடப்பட்டிருந்த கட்டணங்களை கட்டண அறவீட்டின் பிரகாரம் மயானங்களில் 6’x4’ அளவில் நினைவுத் தூவி ஒன்றை புதுப்பிப்பதற்காக ரூபா 30,000 அறவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2022 திசெம்பர் 15 ஆம் திகதி 93603 மற்றும் 2023 மார்ச் 16 ஆம் திகதி 97405 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் முறையே அதற்காக ரூபா 20,000 மற்றும் ரூபா 10,000 அறவிடப்பட்டமை காரணமாக ரூபா 30,000 ஆல் சபை நிதியத்திற்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது | இந்நட்டத்தை மீண்டும் விண்ணப்பதாரிகளிடமிருந்து இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறை என்று தாபிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஜனவரி முதல் மார்ச் வரை தகனம் செய்யப்பட்டிருந்த 07 சடலங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 70,000 தொகையை நகர சபை வருமானத்துக்கு செலவு வைக்காமல் முறைகேடு உண்டு இடம்பெற்று இருந்தது. | அது தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | விரைவில் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டின் ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் ஏப்ரல் 30 வரையான காலப்பகுதிக்குரிய மாநகர சபை சுடலைச்சாலையில் சடலங்களை எரிப்பதற்கு சுடலைசாலை கட்டணமாக உத்தியோகத்தர்களால் அறவிடப்பட்டிருந்த பணத்திற்காக வேறு வருமானத் தலைப்புகளுக்கு உரிய பதிவேடுகள் தவறாக குறிப்பிடப்பட்டு பற்றுச்சீட்டுகள் மாற்றப்பட்டமை உரிய அனுமதிப் பத்திரத்தின் பதிவுகளை மாற்றுதல் பணம் பெற்றுக் கொண்டு பற்றுச்சீட்டுக்கள் வழங்காமை போன்ற வகையில் ஆவணங்கள் மாற்றப்பட்டு பணத்தை சேர்த்து வழங்காமை போன்ற வகையில் ஆவணங்களை மாற்றி சேகரிக்கப்பட்ட ரூபா 620,000 தொகையை வருமானத்திற்கு செலவு வைக்காமல் முறைகேடொன்று இடம்பெற்று இருந்தது. | நி.பி 104 (4) பரிசோதனையின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு கோவைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் 57 கலி சேவைகளை வழங்கியமைக்காக அறவிடப்பட்ட பணத்திற்காக சேவை பெற்றுக் கொள்ளும் போது விண்ணப்பத்தில் ஏனைய வருமானத்திற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் போலியாக இடப்பட்டு கலி சேவைக்காக அறவிடப்பட்ட ரூபா 365,125 தொகை 97403 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் அறவிடப்பட்ட ரூபா 14,250 இறகு பதிலாக ரூபா 6,900 வருமானத்திற்கு செலவு வைத்து ரூபா 7,900 தொரைகயும் 96251 ஆம் இலக்க பற்றுச்சீட்டில் ரூபா 6,900 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் அதில் இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதியில் இரத்து செய்ததாக குறிப்பிட்டு வருமானத்துக்கு | அது தொடர்பாக மாநகர சபையில் ஆரம்ப பரிசோதனை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காமலும் உரிய கலி சேவைகளை வழங்க பெற்றுக் கொண்ட உரிய விண்ணப்பத்தில் பற்றுச்சீட்டு இலக்கத்தை குறிப்பிடாமல் ரூபா 113,275 சபை நிதியத்திற்கு செலவு வைக்காமல் மொத்தம ரூபா 493,200 தொகையான முறைகேடொன்று ஒன்ற இடம்பெற்று இருந்தது | | |
| (உ) | எரிவாயு வழங்கும் நிறுவனம் ஒன்றிடமிருந்து வேறொரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஐந்து பட்டியல்களை பெற்றுக் கொள்ளப்பட்டு இந்த ஐந்து பட்டியல்கள் பெறுமதி ரூபா 96,675 என மாற்றி 2022 திசெம்பர் 19 ஆம் திகதி 2439 ஆம் உறுதிச்சீட்டிற்கு இணைக்கப்பட்டு போலியாக எரிவாயு பெற்றுக்கொள்ளப்படாமல் முற்பணத்தை தீர்வு செய்த ரூபா 92,675 ஆன முறைகேடு ஒன்று இடம்பெற்று இருந்தது. | இது தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | - மேற்படி - |
| (ஊ) | சுடலைச் சாலையில் பேணி செல்லப்படுகின்ற நாளாந்த எரிவாயு பெறுவனவு குறிப்பில் பதிவு செய்யப்பட்ட் அட்டையின் பிரகாரம் 2022 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 37.5 கிலோகிராம் 330 எரிவாயு கொள்கலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் மாநகர சபையின் எரிவாயு கொள்வதற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டின் பிரகாரம் 349 கொள்வனவு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் ரூபா 285,741 ஆன 37.5 கிலோகிராம் அளவிலான 19 எரிவாயு கொல்கலன்கள் சுடலைச்சாலைக்கு கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே சுடலைச் சாலையில் ரூபா 35,000 | இது தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | விரைவாக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இழக்கப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

ஆன எரிவாயு கொல்களனொன்று பற்றாக்குறையாக காணப்பட்டது.

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை - | பரிந்துரை- |
|---|---|---|
| முன் சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொள்ளாமல் மற்றும் சுற்றாடல் அனுமதிபத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் கழிவுகளை வெளியேற்று வதற்கு 2010 ஒக்தோபர் 10 ஆம் திகதி ரூபா 2,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 05 ஏக்கர் வேரகம விஹாரகம தோட்டக்காணி நோக்கத்துக்கு உட்பட்ட பணிகளுக்கு பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | இக்காணி முழுவதிலும் பரவிக் காணப்படும் சுண்ணாம்புக்கல் அவதானிக்கப்பட்டதால் வேறொரு செயற்பாட்டுக்காக பயன்படுத்த அடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | செயற்பட்டத்தை நிறைவேற்றுவற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்பட வேண்டும் |

**3.4 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 09 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 77,397,241 ஆக இருந்ததுடன் அதில் அறவிடாமல் இருக்கம் காலம் 1 ஆண்டிற்கு மேற்பட்டும் 5 இற்கும் குறைந்த மீதி ரூபா 33,044,383 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 22,786,810 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்காக எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | பெற வேண்டிய கணக்குகள் கணக்குகள் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 105,745,130 ஆக இருந்ததுடன் அதில் தீர்வு செய்யப்படாமல் காணப்படும் காலம் 1 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட மீதி ரூபா | நீண்ட காலமாக இருந்து வரும் மீதிகளை எதிர் காலத்தில் அதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழு அறிக்கை | மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 2,265,905 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 71,182,486 தொகை தீர்வு செய்யப்படவில்லை. | பொதுச்சபைக்கு சமர்ப்பித்து தீர்வு செய்வதாக | |
| (இ) | மாநகர சபையால் மீளாய்வாண்டில் கொளவனவு மற்றும் செயற்து திட்டத்திற்காக கொடுப்பளவு செய்யப்பட்ட 03 சந்தர்ப்பங்களுக்குரிய மொத்தம் ரூபா 937,033 ஆன பெறுமதி சேர்வரி (VAT) சபையால் சேகரிக்கப்பட்ட VAT வருமானத்திற்கு ஈடு செய்யப்படாமல் உள்நாட்டு இறைவழி திணைக்கரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது அதன் காரணமாக மீளாய்வாண்டில் சபைக்குப் பெற வேண்டிய ரூபா 937,033 ஆன தொகை மீள்ளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | VAT கட்டுப்பாட்டு கணக்கின் மூலம் சீராக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் அறவிடுவதற்க நடவடிக்கை எடுப்பதாக | விடய பொறுப்பு உத்தியோகத்தரின் பணி பொறுப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும் |
| (ஈ) | மாநகர சபைக்குரிய மீச்சந்தை தொகுதியின் கடைகளை குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கும் போது அறவிடப்பட வேண்டிய நிலுவை ஒரே டைவ பணம் ரூபா 452,115 மற்றும் ரூபா 4,308,287 ஆன தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படா திருந்தத்துடன் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய கடிதங்கள் தயாரிக்கப்பட்டு கணக்காளரின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பரிந்துரை கிடைத்தவுடன் சட்ட நடைமுறை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மாநகர சபைக்கு உரிய காணி ஒன்றில் நடத்திச் செல்லப்படுகின்ற டென்னிஸ் விளையாட்டு அரங்கு, மாத்தளை டென்னிஸ் சங்கம் எனக் குறிப்பிடப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்று அதன் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதும் இதற்காக முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்று அல்லது குத்தகை வாடகை அறவிடும் முறை தொடர்பாக | கேள்வி கோரும் போது தேசிய டென்னிஸ் சங்கத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு உரிய நிபந்தனைகளை உள்ளடக்கி கேள்வி நடைமுறை ஒன்று எதிர்காலத்தில் செயற்படுத்துவதாக | இழக்கப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கும் முறையான வகையில் குத்தகைக்கு வழங்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் முன்வைக்கப்படவில்லை. வாய்வழி இணக்கப்பாட்டின் பேரில் மாதமன்றுக்கு ரூபா 10,000 வீதம் கொடுப்பனவு உறுதி அளிக்கப்பட்ட பேரில் இது நிர்வாகிக்கப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 112,000 ஆன நிலுவைத் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | மாத்தளை மாநகர சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த மாத்தளை கண்டி வீதி 18 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள காணித் துண்டு வெளித் தரப்பினரால் அத்துமீறி உடமை கொள்ளப்பட்டு ஏனைய தரப்பினர் ஒருவருக்காக உப குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் உரித்தை மீள பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு குறித்த காணியின் உரித்தைக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இக்காணிப் பகுதியை சட்டரீதியான உறுதியொன்று மூலம் நகர சபைக்கு கையேற்பதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாக | விரைவில் உரித்தை கையேற்பதற்கும் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.5 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை- |
|---|---|---|---|
| (அ) | வீத வரி பதிவேட்டின் பிரகாரம் ரூபா 100 வீதவரி அறவிடும் 56 காணிகளை பரீட்சித்த போது அக்காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு குடியிருப்பு மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப் பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் அனுமதி இன்றி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களில் இருந்து அதற்குரிய வீரவரியாக ரூபா 510,780 அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு எடுக்கவில்லை. | பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் அந்த ஆவணங்களை பரீட்சித்து தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அத்துமீறிய நிர்மாணம் அகற்றப்பட்டோ அல்லது முறையான நடவடிக்கை எடுத்து உறுதிப்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்று இல்லாமல் அத்துமீறிய நிர்மாணங்களை மேற்கொள்வதன் பேரில் மாத்தளை தேசிய நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையின் கட்டிடம் ஒன்றும் மாத்தளை ரஜ வீதி 91 ஆம் இலக்க கட்டிடம் ஒன்று இருந்தும் முறையே ரூபா 96,000 மற்றம் ரூபா 50,626 என ரூபா 146,626 ஆன வீத வரி வருமானம் ஒன்று அறவிடப்படாதிருந்ததுடன் இணைக்கச் சான்றிதழ் இல்லாமல் குடியிருந்ததால் முறையே 104,100 மற்றும் 73,000 என ரூபா 1777,100 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | அந்த ஆதனங்களைப் பரீட்சித்து எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள்வதாக | சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட வேண்டும். |
| (இ) | மாத்தளை பைப் லைன் வீதியில் மற்றும் டோரா வீதியில் நிரப்புதல் அங்கீகாரம் இன்றி மற்றும் திட்டங்கள் அனுமதிக்கப்படாத இருந்ததால் ஆட்கள் அத்துமீறி வயல் காணிகளில் வீடுகளை அமைத்து குடியிருந்தனர். | உத்தியோகத்தர்களால் உரிய வெளிக் களத்தில் பரீட்சித்து வழங்கப்படும் அவதானிப்புக்களின் பிரகாரம் இது வரை தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | அத்துமீறிய நிறுவனங்களை அகற்றுவதற்கும் முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | பரீட்சிக்கப்பட்ட 12 தொடர்பாடல் கோபுரங்களுக்கு இடையே கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த 08 வீடுகளுக்குரிய முறையாக நகர சபையிடமிருந்து அங்கீகரிக்கப்பட்டு பட்டயப் பொறியியலாளர் ஒருவரின் உறுதிப்படுத்தலுடன் தலைமையான வடிவமைப்பு பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பு திட்டம் ஒன்று அல்லது கட்டிடங்களுக்காக இணைக்கச் சான்றிதழ்களோ பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த கோபுர நிர்மாணம் அமைக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடங்கள் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையொன்றை தருமாறு பிரிவு பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | மாத்தளை எம்.சி வீதி 21 ஆம் இலக்க ஆதனத்திற்குரிய வீதவரி பதிவேட்டின் பிரகாரம் துணி உற்பத்தி தொழிற்சாலை | வெளிக்கள பரிசோதனை அறிக்கையொன்றை | அறவிடப்பட வேண்டிய வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றை பராமரித்துச் செல்வதாக குறிப்பிடப்பட்டு பழைய மதிப்பீட்டின் பேரில் வீதவரி அறவிடப்பட்டிருந்த போதும் பரிசோதனை தேவையான 2023 நவம்பர் 24 ஆம் திகதி வரை அதில் அங்கீகாரம் இன்றி கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு தனியார் பௌத்த பாடசாலை ஒன்று நடாத்திச் செல்வதாக அவதானிக்கப்பட்டதுடன் அதில் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்ட மூன்று கட்டிடங்களுக்காக ரூபா 218,400 வீதவரி அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | பெற்றுக் கொண்டு மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அனுப்பி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு வீத வரித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அறவிடுவதற்கும் அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நகர அபிவருத்தி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்திற்கு முரணாக மீச்சந்தை வர்த்தக கடை தொகுதியின் மோட்டார் வாகன நிறுத்துமிடத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த தரப்பிடத்தில் அளவில் அனுமதியின்றி 468 சதுர மீட்டர் நிர்மாணம் ஒன்றிற்கான ஒரு சதுர அடிக்கு ரூபா 5000 வீதம் ரூபா 2,340,000 ஆன ஒரே தடவை பணம் மற்றும் மாதாந்த வாடகை பெற்றுக் கொள்வதாக சபை அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக 264 சதுர அடிக்கு ரூபா 5000 வீதம் 1,320,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்ட காரணத்தினால் ரூபா 1,020,000 தொகை ஒன்று சபை நிதியத்திற்கு குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | பிரதான மாநகர பொறியியலாளர் தொடர்பு கொள்ளப்பட்டு உரிய கட்டிடத் திட்டம் மற்றும் உரிய தகவல்களை வழங்குமாறு அறிவித்து கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவு ம் ஒரே தடவை பணத்தையும் கடை வாடகை வருமானத்தையும் சபைக்கு அறவிடுவதற்காக தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | வருமானத்தை அறவிடுவதற்கும் அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு அல்லது முறையாக முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | சிறப்பு வர்த்தக கடை தொகுதியின் 34 மற்றும் 36 ஆம் இலக்க கடைகளுக்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டிருந்த அத்துமீறிய பகுதியை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கடை வாடகையாக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 707,900 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வாடகை வருமானத்தை சபைக்கு அறவிடுவதற்காக தேவையான எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | அறவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கும் அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கும் முறையான நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| | | வேண்டும். |
| (ஏ) 2010 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மாதாந்த வாடகையை மதிப்பீடு செய்து கொள்ளாமல் பழைய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டு சபைக்கு பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த ரூபா 651,750 ஆன வருமானம் இழக்கப்பட்டு இருந்தது. | புதிய மதிப்பீட்டு பெறுமதி தொடர்பான அறிக்கை கிடைக்காமை காரணமாக தொடர்ந்தும் பழைய கடை வாடகையை அறவிடுவதற்கு நேர்ந்துள்ளதாக | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொண்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஐ) மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் நடத்திச் செல்லப்படுகின்ற 144 வியாபார நிறுவனங்களில் இருந்து கைத்தொழில் வரி, வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரியாக ரூபா 531,000 ஆன வருமானம் அறவிடப்பட்டு இருக்கவில்லை அவ்வாறே வியாபார அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிய சுகாதார பரிந்துரைகள் வழங்குதல் நிராகரிக்கப்பட்டு இருந்த 4 வியாபாரங்களின் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அல்லது வியாபார தளங்களை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக அனுமதி பத்திரக் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதற்கு வருகை தரும் போது 2023 ஆம் ஆண்டின் நிலுவை வருமானத்தை நானாவித வருமானத்தின் கீழ் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அனுமதி பத்திரங்கள் இல்லாமல் வியாபார நடவடிக்கைகளை செய்து வரும் நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 31 பதவிகளில் 117 வெற்றிடங்களும் 02 பதவியில் 09 மிகைகளும் காணப்பட்டன. | பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உருவாக்குவதற்காக தேவையான சுகாதார தொழிலாளர்களதாக வேவைக்கு தற்காலிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 05 ஊழியர்கள் அந்நோக்கங்களிலிருந்து விலகி அலுவலக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அவர்கள் ஏனைய திணைக்களங்களின் கீழ் சேவை நிறைவேற்றியிருக்கையிவ் சுகாதார செலவினங்களின் கீழ் (21415 - 11) இல் படிகள் கொடுப்ப | இந்த ஊழியர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவசர தேவைக்கான கடமை நடவடிக்கையின் போது மாத்திரம் அலுவலக சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட செயற்பாடுகளுக்காக பதவியணி ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | விஹார வீதியை அபிவிருத்தி செய்தல் ரூபா **12,443,189** பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) | 09 ஆம் இலக்க விடயத்தின் கீழ் Tack Coat இடுவதற்காக ஒரு சதுர மீட்டருக்கு ரூபா 134 வீதம் 2041.50 சதுர மீட்டர்களுக்காக ரூபா 273,561 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் இவ்விடயம் பௌதீக ரீதியாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | Tack coat இடப்படாத இடங்கள் மீண்டும் இடுவதற்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக | மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மான வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | இந்த திட்டத்தை 2023 ஏப்ரல் 08 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு 2023 ஜூன் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு 2023 செப்டம்பர் 18 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் தாமதமான 87 நாட்களுக்காக ஒரு நாளைக்கு ரூபா 4,000 வீதம் ரூபா 348,000 ஆன தாமத கட்டணங்கள் கழிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 99,546 அறவிடப்பட்டதன் காரணமாக ரூபா 248,454 ஆன தாமத கட்டணங்கள் குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வேலை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் கொடுப்பனவு செய்யும் போது ரூபா 99,545.60 ஆன தொகை ஒன்று தற்போது தாமத கட்டணங்களாக அறவிடப்பட்டுள்ளதாக | உடன்படிக்கை பிரகாரம் தாமத கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 05 ஆம் இலக்க விடயத்தின் கீழ் 37.5 மில்லி மீட்டர் ABCீ வழங்குவதற்காக ஒரு கன மீட்டர் ரூபா 4,138 வீதம் 237 கன மீட்டர்களுக்காக ரூபா 980,706 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் வேலை தரத்தில் ABC தொகுக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அளவீட்டுடன் ஒப்பிட்டு பௌதீக பரிசோதனையின் போது ரூபா 131,754 பெறுமதியான 31.84 கன மீட்டர் ஆன ABC இருப்பு பற்றாக்குறை ஒன்று இருந்தது. | கொடுப்பனவு செய்யும்போது அந்த அளவினை கழித்து கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்யுாமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது | வேலைத்தளத்திற்கு வழங்கிய பொருட்களுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் |